சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், நாமக்கல்லில் சரபங்கா வடிநில கோட்ட அலுவலகம் கட்டுமானம் செய்யும் பணிக்கு ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் கட்டுதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித்(என்1)துறை

அரசாணை (நிலை) எண். 144 நாள் 4.8.2009

படிக்கவும்:–

தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களின் கடித எண்.எப்/9000/2008, நாள் 20.1.2009.

---

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் நீர்வள ஆதாரத் துறையின் தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், நாமக்கல்லில் சரபங்கா வடிநில கோட்ட அலுவலகம் கட்டுமானம் செய்யும் பணிக்கு ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. இப்பணிக்கான விவரம் வருமாறு:-

பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு சரபங்கா வடிநில கோட்ட அலுவலகத்திற்கென தனியாக அலுவலகக் கட்டிடம் ஏதுமில்லை என்றும் எனவே, நாமக்கல் மாவட்ட ஆட்சியரது பெருந்திரள் திட்ட வளாகத்தில் சரபங்கா வடிநில கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் கட்டுமானம் செய்ய பிரேரணை செய்யப்பட்டுள்ளது என்றும் பொதுப்பணித்துறை, தலைமை கட்டிட கலைஞர் அலுவலக வரைபட எண்.சி.எ.எண்.8200/3ஆர்–ன்படி கட்டுமானம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தரைதளப்பரப்பு 160.27 ச.மீ. முதல் தள பரப்பு 160.27 ச.மீ ஆக மொத்தம் 320.54 ச.மீ பரப்பில் கட்டுமானம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் இக்கட்டிடம் வலுவூட்டப்பட்ட கான்கிரீட் கூரையுடன் கூடிய மூன்று தளமாக (தரை தளம் மற்றும் இரண்டு தளம்) கொண்டதாக வடிவமைக்கப்பட்டு, தற்போது தரைதளம் மற்றும் முதல் தளம் மட்டும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் 100 ஏக்கர் நிலம் இக்கட்டுமானம் செய்ய இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் கட்டுமானம் செய்ய திட்டமிடப்பட்டுள்ள இடம் நாமக்கல் திருச்செங்கோடு சாலையில் நாமக்கல்லிருந்து 6 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது என்றும் மேற்படி இடமானது முன்பு விவசாய நிலமாக இருந்துள்ளது என்றும் 18மீ ஆழம் வரை களிமண் அமைப்பு உள்ளது என்றும் அலுவலக

கட்டிடத்தின் உபயோகிப்பு விவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து உள்ளார்.

<u>தரைதளம்</u>

நிர்வாக பிரிவு, செயற்பொறியாளர் அறை, பார்வையாளர் அறை, பதிவறை, கழிவறைகள், கண்காணிப்பாளர் அறை, தாழ்வாரம் ஆகியன இயங்க உள்ளது.

<u>முதல் தளம்</u>

கூட்ட அறை, கணினி அறை, ஜெராக்ஸ் இயந்திர அறை, தொழில் நுட்ப பிரிவு, தொழில் நுட்ப பிரிவு தலைவர் அறை மற்றும் கழிவறைகள் ஆகியன இயங்க உள்ளது.

இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை 2009–2010ஆம் ஆண்டில் ரூ.42.00 இலட்சம் ஆகும். இத்திட்டம் திருச்சி மண்டல தலைமைப்பொறியாளரால் செயலாக்கப்படும். எனவே இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைபடாது என தெரிவித்துள்ளார்.

3. நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், நாமக்கல்லில் சரபங்கா வடிநில கோட்ட அலுவலகம் கட்டுமானம் செய்யும் பணிக்கு ரூ.42 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் 2009 –2010–ம் ஆண்டு பகுதி –II திட்டத்தின் கீழ் நிலை நிதிக்குழு ஏற்பளித்துள்ள நிலையில் நாமக்கல் மாவட்டம் நாமக்கல்லில் சரபங்கா வடிநில கோட்ட அலுவலகம் கட்டுமானம் செய்யும் பணிக்கு ரூ.42 இலட்சம் (ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லரைச் செலவினம் சிறுமேற்பார்வை செலவினம் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள் மொத்த பணி (works) மதிப்பீட்டுத் தொகையில், 2.5% –க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேற்கண்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

> 4701 – பெரிய நடுத்தர பாசன திட்டங்கள் குறித்த மூலதன செலவு – 03 நடுத்தர பாசனம் – வாணிகத் தன்மை வாய்ந்தது – 380 பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் கீழ் அலுவலகம் கட்டிடம் கட்டுதல், புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநில திட்டம் – (JQ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு சரபங்கா வடிநில கோட்ட அலுவலகம் கட்டுதல் – 16 பெரும் பணிகள் (த.தொ.கு. 4701 03 – 380 JQ 1603).

5. தலைமைப்பொறியாளர் திருச்சி மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்தி, திட்டப்பணி முன்னேற்றம் குறித்த அறிக்கையை உடனுக்குடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அசாகு எண். 33435/PW II/09 நாள் 19.6.2009 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமைப்பொறியாளர்,
நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), சென்னை–5.
தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, திருச்சி மண்டலம்.
தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), சென்னை–5.
நகல்
ஐ ஸ்பெஷல், பொதுப்பணித்துறை, சென்னை–9.
நிதித்துறை, பொ.ப. II/வ.செ.பொது II,
மாவட்ட கருவூல அலுவலகம், திருச்சி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்